தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 22, திருவள்ளுவர் ஆண்டு – 2045

2014 ஆகஸ்ட் 7, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்."

மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், குளிர்ச்சியான நிழலைத் தரும் மரங்கள் நிறைந்த காடும் ஆகிய நான்கும் உடையதே இயற்கையாய் அமைந்த கோட்டை ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 360, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

360—

பாலங்கள்

***49929—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கட்டளைமேட்டு வாய்க்காலின் குறுக்கே திருக்காம்புலியூர், பிச்சம்பட்டி கிராமங்களிலும், தென்கரை வாய்க்காலின் குறுக்கே கிருஷ்ணராயபுரம், திருக்காம்புலியூர் மற்றும்

வலையாபாளையம் ஆகிய கிராமங்களிலும் பாலங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி, கட்டளைமேட்டு வாய்க்காலில் உள்ள பாலங்களை முழுமையாகச் சீரமைக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான ஆணையினைப் பெற்று ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

திரு. செ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட வாய் மூடும் முன்பே, பணிக்கு உத்தரவிடும் பனி லிங்க சுவாமி அம்மா நீங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களுக்கு கிள்ளிக் கொடுத்தால் நாழியாகும் என்று, அள்ளி அள்ளிக் கொடுக்கும் அட்சய பாத்திரம் அம்மா நீங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு கஷ்டம் எல்லாம் நீங்கி நாளை இந்தியாவை ஆளப்போவதும் நீங்கள் அம்மா; வள்ளலின் வாரிசு அம்மா நீங்கள்; வாழ்நாள் வள்ளல் அம்மா நீங்கள்; மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட கட்டளைமேட்டு வாய்க்காலின் குறுக்கே திருக்காம்புலியூர், பிச்சம்பட்டி கிராமங்களிலும், தென்கரை வாய்க்காலின் குறுக்கே கிருஷ்ணராயபுரம், திருக்காம்புலியூர் மற்றும் வலையாபாளையம் ஆகிய கிராமங்களிலும் சுமார் 85 ஆண்டுகளுக்கு முன் கட்டிய பழமையான, சேதமடைந்த பாலங்களை அகற்றிவிட்டு புதிய பாலங்கள் கட்ட, அதற்குண்டான விரிவான மதிப்பீடு தயார் செய்து, 2014 ஆம் ஆண்டு இறுதிக்குள் பாலங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி, கட்டளைமேட்டு வாய்க்காலின் குறுக்கே திருக்காம்புலியூர், பிச்சம்பட்டி மற்றும் தென்கரை வாய்க்காலின் குறுக்கே கிருஷ்ணராயபுரம், திருக்காம்புலியூர் மற்றும் வலையாபாளையம் ஆகிய கிராமங்களில் பாலங்கள் கட்ட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான ஆணையினைப் பெற்று, காவேரி சீரமைப்புத் திட்டத்தில் முழுமையாக அந்தப் பாலங்களைச் சீரமைக்க, திட்ட வடிவமைப்புக் கோட்டம் திருச்சி மூலமாக, விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதி, மேல்மங்கலம் கிராமத்தில், ஈஸ்வரன் கோயில் அருகில் ஓடும் வராக நதியில் காட்டாற்று வெள்ளம் அதிகமாக வருகிற காலத்தில், அந்தப் பகுதியைக் கடந்து செல்கிற விவசாயிகள் பல நேரங்களில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படக்கூடிய நிலையிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு அதுபற்றி நன்றாகவே தெரியும். அந்தப் பகுதி விவசாயிகள் நீண்ட காலமாக இதுகுறித்து கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, ஈஸ்வரன் கோயில் அருகே ஒரு மேம்பாலம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்களுடைய கோரிக்கையின் அவசியத்தைப் பற்றி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

முற்பகல் 10-05

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டளைமேட்டு வாய்க்காலிலும், தென்கரை வாய்க்காலிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பாலங்கள் கட்டப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், அந்தக் கட்டளைமேட்டு வாய்க்காலும், தென்கரை வாய்க்காலும் அதிகமாக ஓடுகின்ற பகுதி குளித்தலை பகுதி. அவை ஏறத்தாழ 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு குளித்தலை பகுதியிலே சென்று, கிட்டத்தட்ட 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள் சொன்னதுபோல 85 ஆண்டுகளுக்கு முன்பு பழைய தொழில்நுட்பத்தோடு கட்டப்பட்ட அந்தப் பாலங்கள், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அதுபோன்று கிட்டத்தட்ட 80 பாலங்கள் எங்கள் தொகுதியில் இருப்பதால், அவற்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வுசெய்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று சீர் செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த இதே கோரிக்கையினை, ஏற்கெனவே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் என்னிடம்*

கொடுத்திருக்கின்றார்கள். ஆகவே, இரண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதுசம்பந்தமாக கொடுத்த கோரிக்கையினை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு அனுப்பி, ஆணை பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) திட்ட வடிவமைப்புக் கோட்டம், திருச்சி, மூலமாக காவேரி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் திட்ட மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய காடந்தகுடி ஊராட்சிப் பகுதியிலே வளையனேரி என்ற ஒரு ஏரி இருக்கின்றது. அதன் வழியாக விவசாயிகள், அவர்களுடைய நிலங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தினால், அவர்கள் நடந்து செல்வதற்கு ஒரு நடைபாதை, அதாவது* causeway *அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். அதற்கு 25 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று தெரிகிறது. எனவே, அதை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியில் ஓடக்கூடிய கமண்டல நாகநதியின் குறுக்கே சுமார் 7 மீட்டர் அளவிலே 1954 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஓர்*

ஆற்றுப் பாலம் இருக்கின்றது. அந்தப் பாலம் நல்ல முறையிலே இருக்கின்றது. அதிலே எந்தவிதமான குறையும் இல்லை. ஆனால், தற்போது ஏற்பட்டிருக்கக்கூடிய வாகனப் பெருக்கத்தின் காரணமாக, அந்தப் பாலத்திலே அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதற்கு இணையாக ஒரு தரைமட்டப் பாலம், பழைய ஆற்காடு சாலையிலே இருந்தது. ஆனால், அதை இன்றைக்கு முழுமையாகப் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அந்தப் பகுதியிலேயும் ஒரு உயர்மட்டப் பாலத்தைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அந்தப் பழைய பாலத்தின் இருபுறமும் விளக்குகள் அமைத்துத் தரவேண்டும். அது நெடுஞ்சாலைத் துறையின் வசம் இருக்கின்றது. எனவே, அங்கே விளக்குகள் அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்களுடைய கோரிக்கையின் அவசியம் கருதி, இந்தப் பிரச்சினையையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய ஆணையினைப் பெற்று, ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமானது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பரம்பிக்குளம்-ஆழியாறு நீர்த்தேக்கத் திட்டத்திலே மிகப் பிரதானமான Contour Canal என்று சொல்லப்படக்கூடிய சம மட்டக் கால்வாய் 48 கிலோ மீட்டர் நீளமுள்ளது. அந்தக் கால்வாயில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, 200 கோடி ரூபாய்க்கும் மேலாக நிதி ஒதுக்கப்பட்டு, வேகமாகப்

2014 ஆகஸ்ட் 7]

பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது சோலையாறு அணையும் நிறைந்து, பரம்பிக்குளம் அணையும் நிரம்பிக் கொண்டிருக்கின்றது. பரம்பிக்குளம் அணையிலிருந்து தண்ணீரை திருமூர்த்தி அணைக்குக் கொண்டுவர வேண்டுமென்றால், Contour Canal என்று சொல்லப்படக்கூடிய அந்தச் சம மட்டக் கால்வாயின் பணிகள் வேகமாக முடிக்கப்படவேண்டும். எனவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பணிகள் எவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; எப்பொழுது முடிவடைந்து, தண்ணீர் திருமூர்த்தி அணைக்குக் கொண்டுவரப்படும் என்கின்ற இந்த முக்கியமான வினாவிற்கு பதிலளிப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கார்பதியிலிருந்து அமராவதி அணைக்கு 49 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு குகைக் கால்வாய் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மூன்று பகுதிகளாக அந்தப் பணிகள் எடுக்கப்பட்டு, 65 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள பணிகளை முடிக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 6, 7 மாதங்கள் ஆகும். இப்போது உடனடியாக அந்தப் பகுதிக்குத் தண்ணீரை அனுப்பி, திருமூர்த்தி அணையை நிரப்ப வேண்டிய அவசியம் இருப்பதால், இந்தப் பருவம் முடிந்த பிறகு, மீதமுள்ள 35 சதவிகிதப் பணிகளை மேற்கொண்டு, முழுமையாக அப்பணிகள் செய்து முடிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

முற்பகல் 10-10

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றிலிருந்து வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரை கதவணை கட்டி சிதம்பரம் பகுதிக்குத் திருப்பிவிட வேண்டும் என்கிற நீண்ட நாள் கோரிக்கையை இந்த அவையில் நானும் பல முறை எழுப்பியிருக்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னால் நாகை மற்றும் கடலூர் ஆகிய

மாவட்டங்களுக்கிடையில் கோ. ஆதனூர், குமாரமங்கலம் ஆகிய பகுதிகளுக்கிடையில் 400 கோடி ரூபாய் செலவில் கதவணைகள் கட்டி, அந்தத் தண்ணீரைத் திருப்பி விடுகின்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். இதற்காக அந்தப் பகுதி மக்கள் சார்பிலும், என் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், கொள்ளிடம் ஆற்றில் கடல் நீர் உட்புகுகின்ற காரணத்தினால் இரண்டு பக்கங்களிலும் உள்ள ஐந்து, ஆறு ஒன்றியங்களில் உப்பு நீர் கலந்து, நிலத்தடி நீர் உப்பு நீராக மாறி, குடிநீர்கூட பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. எனவே, கொள்ளிடம் ஆற்றில், வல்லம் அணைக்கும் கொள்ளிடத்திற்கும் இடையிலே தடுப்பணை கட்டி, கடல் நீர் உட்புகாமல் தடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் 1,600 கோடி ரூபாய் செலவில் வெள்ளத் தடுப்புக் கால்வாய்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணி கூடியவிரைவில் நடைபெறவிருக்கிறது. காவேரி நதி நீர் சீரமைப்புத் திட்டத்தின்படி வெள்ள நீரை ஒழுங்குபடுத்தி, எந்தவிதத்திலும் கடல் நீர் உட்புகாமல் தடுத்து, விவசாயம் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படாமல் தடுத்து நிறுத்தக்கூடிய பணிகளை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, கம்பம்

பிளாக்கில் இருக்கின்ற மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வருகின்ற கூத்தநாச்சி ஓடை நீரை கேசவபுரம் கண்மாய்க்குக் கொண்டு வந்து நிரப்பினால், சுற்றியிருக்கின்ற 10 கிராமங்கள் பயன்பெறும். அந்தக் கண்மாய் 15 வருடங்களாகத் தூர் வாரப்படாமல் இருக்கிறது. அந்த வாய்க்காலைத் தூர் வாரி, கண்மாயையும் தூர் வாரி, அந்த ஓடையில் இரண்டு Check Dams *அமைத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு அதிக பலனைக் கொடுக்கும் என்பதைக் கூறி, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள் மூன்று தினங்களுக்கு முன்னால் இதே கோரிக்கையை என்னிடம் தெரிவித்தார்கள். இந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 361, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

361—

துணை மின் நிலையம்

***32674—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, வேந்தன்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?